செ.வெ.எண்.363/2021 நாள் : 02.09.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தல்-2021 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தல்-2021 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் ஊரக உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2021 நடத்திடும் பொருட்டு 6 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1,779 கிராம ஊராட்சி வார்டுகள், 208 கிராம ஊராட்சி தலைவர்கள், 125 ஊராட்சி ஒன்றிய வார்டுகள் மற்றும் 13 மாவட்ட ஊராட்சி வார்டுகள் ஆகியவற்றிற்கு உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. 13 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கு 2 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் 13 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கு 6 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் 24 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், ஊராட்சி தலைவர் 208-க்கு 6 தேர்தல் நடத்தும் அலுவலர்களும் 36 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் மற்றும் 208 ஊராட்சி வார்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக அறிவிக்கை வெளியிடுதல். வேட்பு மனுக்களை பெறுதல், சின்னங்களை ஒதுக்குதல், வாக்குச்சாவடி மையங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்தல், வாக்குச்சாவடி மையங்களுக்கு தேர்தல் அலுவலர்களை நியமித்தல் போன்ற பணிகளை செய்வது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகேஸ்வரி, இணை இயக்குநர்(வேளாண்மை) திரு.ராஜசேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) திரு.ஹரிஹரன், உதவி இயக்குநர் திரு.ஆர்.அருண், உதவி திட்ட அலுவலர்கள் திரு.ரூபேஷ்குமார், திருமதி.விஜயகுமாாரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.**